# கிறித்துவ சமயத்தின் கோட்பாடுகளும் நம்பிக்கைகளும்

25

**முனைவர் து.லதா**
**உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**தமிழ்த்துறை சுயநிதி பிரிவு,**
**வேளாளார் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திண்டல், ஈரோடு-12**

**ஆய்வு நோக்கம்**

மானுடர்களின் ஆன்மீக வாழ்விற்கும் சமுதாய ஒழுக்கத்திற்கும் தேவையான வழிகளையும் நெறிகளையும் மிக எளிமையாகவும் அனைவரும் ஏற்கும் வகையில் அமைந்திருக்கும் நெறி கிறித்துவ நெறியாகும். இறைவன் மக்களை மீட்கும்படியாக, மனித உருவில் தோன்றி, அவர்களுக்கு வருங்காலத்தை அறிவிக்கும் தீர்க்கராகவும், சிறந்த ஆன்மீக வழியைக்காட்டும் குருவாகவும் நிலையான விடுதலையைக் கொடுக்கும் அரசராகவும் விளங்குகிறார் என்பது வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் தோன்றிய பெரும் சமயங்களுள் ஒன்றான கிறித்துவ சமயத்தில் இயேசு பெருமான் திருவாய் மலர்ந்தருளிய அறிவுரைகள், பொன் மொழிகள் மக்களுக்கு உறுதி பயக்கும் சிறந்த உண்மைகளை எடுத்துரைக்கிறது.

**திறவுச்சொல்** - யு+தர் குலம் – தோமையார் – மணி கிராமம் – இறைத்தத்துவம் – பிதா – சுதன் – யோசேப்பு – கிறித்துவத் தத்துவங்கள்

**உலக வரலாற்றில் கிறித்துவம்:**

கிறித்துவ சமயம் இஸ்ரவேல் நாட்டில் தோன்றியது. இஸ்ரவேல் என்ற மனிதருக்குப் பன்னிரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களின் பெயர்கள் முறையே "ரூபன், சிமியோன், லேவி, யு+தா, தாண், நப்தலி, காத், ஆசேர், இசக்கார், செபுலோன், தீனாள், யோசேப்பு, என்பவர்கள். இவர்களைக் கொண்டும் இவர்களின் பெயகர்ளால் குலம் உருவானது. இவர்களைப் பன்னிரண்டு கோத்திரம் என்பர்."[1] .

தன்னைப்போல் பிறரிடமும் அன்பு காட்டுங்கள் பிறர் செய்யும் தவறுகளை மன்னியுங்கள். ஒருவன் ஒரு கன்னத்தை அடித்தால் மறு கன்னத்தையும் காட்டுங்கள், பகைவரிடம் அன்பு காட்டுங்கள் போன்ற சொற்பொழிவுகள் கிறித்துவின் அன்பும் அருளும் இவ்வுலக மக்களின் உள்ளத்தை பண்படச்

செய்தது. கிறித்துவம் வளர்ந்தது. இன்று உலக அளவில் மிகபெரிய சமயங்களுள் ஒன்றாக விளங்குகிறது.

**இந்திய வரலாற்றில் கிறித்துவம்:**

இயேசு பெருமானின் மாணக்கரான தோமையர் இந்தியாவிற்கு வந்த பிறகே கிறித்துவ மதம் தோற்றம் பெற்றது. அவர் 'கி.பி.49 இல் இந்தியாவின் வடபுலத்திலுள்ள தட்ச சீலத்திற்கு வந்தார். அவர் அங்கு வந்தபோது, 'கொண்ட பேரரசு' என்னும் அரசர் அந்நிலத்தை ஆண்டு வந்தார். மேலும் காபு+ல், காந்தகார், பஞ்சாப்பின் மேற்கு மற்றும் தென் பகுதிகளில் கிடைக்கப்பட்ட நாணயங்களில் கொண்ட பேரரசு மன்னனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பொறிப்பு 'கொண்ட போரசு' மன்னனின் ஆட்சியை உறுதி செய்கிறது. எனவே தோமையா கொண்ட போரசு மன்னனைச் சந்தித்து, அவரது அரண்மனையை உருவாக்கியதில் பெரும்பங்காற்றி, அவரோடு தங்கி அவருக்கும் இயேசு பெருமானின் அருட்செய்தியை அறிவித்தார் என்று வெனிசிய நாட்டுப் பயணி மார்க்கோ போலோ கி.பி. 1295 இல் மயிலாப்பூரிலுள்ள தோமையாவின் கல்லறையைப் பார்வை யிட்டதாகத் தமது குறிப்பேட்டில் எழுதியுள்ளார். தூய தோமா கி.பி 49 இல் தட்ச சீலம் வந்து மீண்டும் எருசலேமுக்குத் திரும்பியதாகவும் மறுமுறை அவர் கி.பி. 52 ஆம் ஆண்டில் தமிழகத்தின் மேலைக் கடற்கரையாகிய மலபரிலுள்ள கடுங்களூருக்கு வந்து நற்செய்திப் பணியாற்றி சுமார் 20 ஆண்டுகள் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கிறித்துவப் பணியை மேற்கொண்டார். கொல்லம், நிரணம், சாயல், சேர்க்கமங்கலம், கோட்டக்காவு , பாலயு+ர் ஆகிய இடங்களில் திருச்சபைகளைக் கட்டினார். குமரி மாவட்டத்திலுள்ள மணிக்கிராமம் என்ற திருவிதாங்கோட்டிலும் ஓர் ஆலயம் அமைத்தார்'[2].

இந்திய வரலாற்றில் 16 ஆம் நூற்றாண்டு வாணிப நோக்குடன் வந்த ஐரோப்பியர்கள் இந்தியாவை தங்கள் ஆதிகத்தின் கீழ் கொண்டு வரவும் கிறித்துவ சமயம் பரவ முயற்சியும் செய்தார்கள். தங்கள் சமயத்தை பரவச் செய்வதுமன்றி சமூகசீர்த்திருத்தங்களையும் மேற்கொண்டனா;. ஐரோப்பியர்களின் சமயத்தொண்டும் சமூகத்தொண்டும் இந்தியாவில் கிறித்துவ சமயம் பரவுவதற்கு அடிப்படையாக அமைந்தன.

**தமிழக வரலாற்றில் கிறித்துவம்**

உலகில் பழமையான நாகாரிகமுடைய நாடுகள் தமிழகத்தை மையமாகக்கொண்டு தங்களுடைய வாணிபத்தைப் பெருக்கினர். அத்துடன் பண்டைத் தமிழகம் பிற நாடுகளோடு கொண்டிருந்த தொடர்பும், தூய தோமாவின் அருட்பணியும் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் கிறித்துவ சமயம் பரவுவதற்கு கரணமாயிருந்தன'[3] என்று சரித்திரம் கூறுகிறது. இந்தியாவில் கிறித்துவ சமயம் முதன் முதலில் தமிழகத்தில் தான் விதைக்கப்பட்டது .16 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரையில பண்டைய தமிழ் மன்னரும், சிற்றரசர்களும் அரசாட்சி இழந்து, புதிய புதிய அரசர்களும், தலைவர்களும் இந்நாட்டில் தோன்றினர். பிறகு அவரும் அழிந்தொழிந்து குறுநில மன்னர்களும், பாளையக்காரர்களும் அரசாண்டனர். 'பிரெஞ்சு,

இங்கிலீஷ்காரர் சண்டைகளும், கர்நாடக நவாப்புகளின் போர்களும் பாளையக்காரரின் தொல்லைகளும் மராட்டியரின் படையெடுப்பும் ஐதரலி திப்புசுல்தான் கலகங்களும் ஆகிய அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன, [4] மேலும் 19 ஆம் நூற்றாண்டில் தமிழகச் சமுகத்தில் சாதி வேற்றுமைகளும் அதன் வழியிலாகத் தீணடாமைத் தீமைகளும், சமய வேற்றுமை பாராட்டுதல்களும் இருந்தன. உயர்வு தாழ்வு பாராட்டுதலும், அடிமட்டத்திலிருந்தோர்க்குக் கட்டாய வேலைப் பளுவும், பிற தண்டங்களுமிருந்தன. இடைவிடாப் பஞ்சங்களும் அறியாமை வளப்படுத்திக் கொண்டிருந்த தொத்து வியாதிகளுக்கும் சமுகத்தினர் பலியாகிக் கொண்டிருந்தனர். விரயமான விழாக்களும், மூடப் பழக்கங்கள் வழங்கிய கொடிய சமூகத் தீமைகளும் தொடர்ந்தன. சமூகத்தின் மேல் மட்டம் தழைத்தபோது இடை மட்டமும் அடிமட்டமும் நலிவுற்றுக் கொண்டிருந்தன."[5] என்று சாரித்திரம் கூறுகிறது 19 ஆம் நூற்றாண்டு காலம் கடந்து வாழ்ந்து கொண்டிருந்த மரபுகளையும் சில நடை முறைகளையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றி, மூடநம்பிக்கைகளுக்கு வலுவளித்திருந்ததைப் பயன்படுத்திக் கிறித்தவ சமயப்பணியாளர்கள் சமயப்பணி செய்து கொண்டிருந்தனர். ஆங்கிலேயாரின் வருகையால் இந்திய அரசியல் அமைப்பிலும் சமுதாயத்திலும் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. 'சமூதாயத்தில் நிலவிய மூடப்பழக்க வழக்கங்கள், சமயப்பு+சல்கள், தீண்டாமை பெண் உரிமை மறுப்பு, சாதிக் கொடுமைகள், உடன் கட்டை ஏறுதல் போன்றவற்றில் தலையிட்டு அவற்றைக் கண்டித்தனர் .சீர்த்திருத்தக் குரலும், உரிமைக் குரலும் எழுப்பப்பட்ட நூற்றாண்டில் இந்து சமய நிறுவனங்கள் விலக்கி வைத்த மக்களில் ஒரு பகுதியினர் இந்து சமயத்தைப் புறக்கணித்து கிறித்துவ சமயத்தைத் தழுவினா;."[6]. கிறித்துவ சமயம் இந்தியாவிலும் தமிழகத்திலும் பரவுவதற்கு சமூக நிலையும் காரணமாக அமைந்தது, என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளின் வழியாக அறிய முடிகிறது.

**இறைத்தத்துவம்:**

கிறித்துவ சமயத்தின் இறைத் தத்துவத்தில் பிதா,குமாரன், பரிசுத்த ஆவி என்னும் திரித்துவக் கொள்கைகையைக் கூறுகிறது. நெருப்பில் சுவாலை, வெளிச்சம், வெப்பம் ஆகிய மூன்று குணங்கள் எவ்வாறாயினும் நெருப்பு ஒன்றே"[7] என மே.வேங்கடேசன் குறிப்பிடுகிறார், இதே போன்று பிதா, சுதன் , தூய ஆவியார் என்று மூவரும் சேர்ந்து ஒரே கடவுள். மூவருக்கும்ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே இறையியல்பு, ஒரே மகிமையுண்டு. இந்தத் திரித்துவத்தின் தலைமைத்தத்துவம் பிதாவாகிய தேவனிடத்தில் உள்ளது. அவரே தலைவராக செயல்படுகிறார். இவ்வகையில் பிதா பெரியவராக கருதப்படுகிறார் (யோவா 14:28,1 கொரி 11:3,15:28) என்ற விவிலியத்தில் கூறப்பட்டுள்ளன"[8]

**அவதாரம்:**

மக்கள் போரின்பம் பெறும் பொருட்டு இறைவன் அருட்டிரு மேனி கொண்டார் என இறைவனின் மனித அவதாரத்தைப பற்றி பல சமயங்களும் ஏற்றிக் கூறி அவற்றைப் போற்றுகின்றன. அவதார் ' என்பதற்கு 'கீழே இறங்கி வருதல் ' என்னும் பொருளைத் கழகத்தமிழ் அகராதி தருகிறது. தமிழில்

இதனோடு, ஆம் என்னும் விகுதி சோ;க்கப்பட்டு ‘ அவதாரம்’ என் வழங்கப்படுகிறது. சமயநிலையில் கூறும் போது விண்ணுலகிலுள்ள கடவுள், மக்கள் வாழும் மண்ணுலகிற்கு இறங்குதலே அவதாரம் ஆகும். இதனைத் திருமூலர்

‘விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன் வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிப்பறுத் தானே”[9]

எனப் போற்றுகிறார். பாவ வினையை ஈடுகட்டுவதற்காகக் கடவுள் ஊனுடம் பெடுத்து விண்ணுலகிலிருந்து இறங்கினார் என்பதன் மூலம் கீழே இறங்குதல் தான் அவதாரம் ஆகும். கீழே இருந்து மேலே ஏறுதல் அவதாரமாகாது என்றக் கருத்தினைச் சுட்டுவதாக அமைகிறது

இயேசு பிறப்பதற்குச் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் ‘ஏசாயா என்ற தீர்க்கதரிசி இயேசுவின் பிறப்பைக் குறித்துச் சொல்லி இருப்பதை விவிலியம் பழைய ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.”[10] ஆதித்தாய் தந்தையரான ஏவாளும் ஆதாமும் தேவ கட்டளையை மீறினார். வாய் வழியாக உண்ட நஞ்சு வயிற்றுனுள் சென்று உடல் உறுப்புக்களனைத்தையும் அழிப்பது போன்று ஆதித்தாய் தந்தையர் செய்த பாவ வினை அவர்தம் மக்களாகிய நம் அனைவரையும் வருத்துகின்றது. அவ்வினை நீங்கவே அளவிறந்த அன்பு கொண்ட ஆண்டவன் மனித உடலெடுத்து வந்து தம்மையே பலியாக்கி நம்மை வான் வீட்டுட்டுக்குச் செலுத்தும் மீட்பர் ஆனார்.”[11]

**நற்செய்தி**

‘நற்செய்தி அல்லது ‘சுவிசேஷம்’ என்பது **Evangellion** என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. இதன் பொருள் ‘நல்ல செய்தி’ என்பதாகும். அழிந்து கொண்டிருக்கும் உலகிற்கு அன்பின் தேவன் விடுவிக்கும் நல்ல செய்தியே நற்செய்தி ஆகும். தேவனுடைய நற்செய்தியை மக்களுக்கு அறிவிப்பதே நற்செய்திப் பணி ஆகும். ‘தேவன் உலகத்திலுள்ள யாவரை நேசிக்கிறார். எனவே தன்னுடைய ஒரே குமாரனை இவ்வுலகிற்குத் தந்தருளினார் என்பதே நற்செய்தி[12] யாகும் கிறித்துவும் மனித குலத்தின் பாவத்திற்குத் தண்டனையாக தானே சிலுவையில் பலியானார்.

**மனித குலத்தின் தந்தை:**

யு+தர்களுக்கு மட்டுமே உரிய கடவுளாக இருந்த நெறியை மாற்றி இறைவன் உலகமக்கள் அனைவருக்கும் தந்தை எனவும், அதலால் நாம் அனைவரும் சாகோதரா;கள் என்னும் புதிய நெறியை இறைவன் இயேசுக்கிறித்துவின் வழியாக உலகமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட உண்மையாகும். கிறித்துவின் வழியாக உலக மக்கள் யாவருக்கும் உரிமையாக்கப்பட்டது.

**முடிவுரை**

கிறித்துவ சமயம் இசுரவேல் நாட்டில் தோன்றியது. இச்சமயத்தைத் தோற்றுவித்தவர் இயேசு பெருமான் ஆவார். இயேசு பெருமானின் புதிய நெறிகளே உலகம் முழுவதும் பரவுவதற்குக் காரணமாக அமைந்தன. இன்று உலக அளவில் மிகப்பொரிய சமயங்களுள் ஒன்றாக இச்சமயம்

விளங்குகிறது. மனுகுலம் செய்த பாவத்திற்குத் தண்டனையாக தன் குருதியைக் கொடுத்து ஜீவகோடியை மீட்டவர் இயேசு என்று மீட்பின் தத்துவத்தைக் கிறித்துவம் விளக்குகிறது. பரம்பொருளாகிய இறைவன் தன் ஒப்பற்ற திருக்குமாரனை இவ்வுலகிற்குத் தந்து மானுடரை மீட்ட அன்பின் வெளிப்பாட்டை அறியமுடிகிறது.

**அடிக்குறிப்பு**

| | | |
|---|---|---|
| 1. | பரிசுத்த வேதாகமம் | ஆதி 29 31-35 |
| 2. | வேதாந்தமும் கிறித்துவமும் | ப.எண் -89 |
| 3. | தமிழக வரலாறும் பண்பாடும் | ப.எண் – 418 |
| 4. | மேலது | ப.எண்-9 |
| 5. | மேலது | ப.எண்-415 |
| 6. | மேலது | ப.எண்-415 |
| 7. | சமயங்களின் தமிழ்த்தொண்டு | ப.எண்.-89 |
| 8. | வாழ்வியல் விளக்க வேதாகமம் | ப.எண்-1715 |
| 9. | திருமந்திரம் விளக்கம் | ப.எண்-11 |
| 10. | பரிசுத்த வேதாகமம் | எசாய 9 6 |
| 11. | வாழ்வியல் விளக்க வேதாகமம் | ப.எண்-1808 |
| 12. | வேதாந்தமும் கிறித்துவமும் | ப.எண் -16-17 |

**துணை நு}ற்பட்டியல்**

**முதன்மை நு}ல்**

1. பரிசுத்த வேதாகமம்

**துணை நு}ற்பட்டியல்**

1 வேதாந்தமும் கிறித்துவமும் - யா.த.பாசுரதாசு,2008

2. தமிழக வரலாறும் பண்பாடும் - வே.நி.செல்வம்

3. சமயங்களின் தமிழ்த்தொண்டு - மே. வேங்கடேஷன், 1999

4. வாழ்வியல் விளக்க வேதாகமம் - ஆல்ஃப்ரட் தேவதாசன்

5. திருமந்திரம் விளக்கம் - யோகி சுத்தானந்த பாரதியார்

6. அவதாரமும் கிறித்துவமும் - யா.த.பாசுரதாசு, 2008